

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலர் 5, பகுதி14, வார்டு 61 எழும்பூர் வெங்கு தெருவில் மாமன்ற உறுப்பினர் நிலைக்குழு உறுப்பினர் கல்வி ஏ.எஸ். பாத்திமா முசப்பர் எம்.சி. 2022–23 ஆம் ஆண்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உடற்பயிற்சிக் கூட கட்டடத்தை, பெருநகர வளர்ச்சி குழுமத் தலைவர் மற்றும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் ஆகியோர் திறந்து வைத்து உடற்பயிற்சி செய்வதை பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, 5வது மண்டல குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் சொ.வேலு, பகுதி செயலாளர் வி.சுதாகர், 61வது வட்ட கழகச் செயலாளர் டால்பின் எஸ்.ஹரி, 61வது (அ) வட்ட கழகச் செயலாளர் இ.மொய்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கூடுதல் பேருந்துகளை இயக்குவது தொடர்பாக,

# எண்ணூர் - திருவொற்றியூர் பேருந்து நிலையங்களில் ஆய்வு!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் மேற்கொண்டார்!

சென்னை, ஆக. 3 -

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 29.07.2024 அன்று மாநகர் போக்குவரத்துக் கழகத்தை சார்ந்த எண்ணூர் பணி மனை மற்றும் எண்ணூர் பேருந்து நிலையத்திலும், அதனைத் தொடர்ந்து திரு வொற்றியூர் பேருந்து நிலை யத்திலும், பொது மக்களின் தேவைக்கு ஏற்ப கூடுதல் பேருந்துகள் இயக்குவது தொடர்பாக ஆய்வு செய்து, அடிப்படை வசதிகள் குறித்து அங்கு இருந்த அதி காரிகளிடம் கேட்டறிந்தார்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

“எண்ணூரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.1.5 கோடியும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.1.29 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. 6 மாத காலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும். மேலும் பொதுமக்களின் கோரிக்கையை நிறை வேற்றும் வகையில் அதி காலை நேரத்தில் பேருந்து சேவை அதிகரிப்பதோடு, அனைத்து பேருந்துகளும் சரியான நேரத்தில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எண்ணூரில் இருந்து டோல் கேட் வரை பள்ளி மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதனால் கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து கழகத்திற்கு புதியதாக 7,200 பேருந்துகள் வாங்கு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வாரத்தில் தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் அந்தந்த மாவட்டங்களில் 300க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதே போல் விரைவில் சென்னை மாநகரத்தில் புதிய பேருந்துகள் இயக்கப்படும். பழைய பேருந்துகள் சீரமைக்கப்படும்.

இவ்வாய்வின் போது, திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண் இயக்குநர் எஸ்.நடராஜன், பொது மேலாளர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதி நிதிகள் உடன் இருந்தனர்.

### மூன்று சதவிகித உள் ஒதுக்கீடு செல்லும் என்ற

# உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று மாதவரத்தில் கொண்டாட்டம்!

### புழல் எம்.நாராயணன் தலைமையில் இனிப்பு - நல உதவிகள் வழங்கினர்!

மாதவரம், ஆக.3-

மூன்று சதவீத இட ஒதுக்கீடு ஒப்புதல் வழங்கிய உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு வரவேற்று மாதவரத்தில் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் இனிப்பு மற்றும் நல உதவிகள் வழங்கி கொண்டாடினர்.

சென்னை வட கிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், உச்சநீதிமன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த அருந்ததியருக்கான மூன்று சதவீத இட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்து தீர்ப்பளித்ததை, மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் சமூக நீதியை நிலைநாட்டும் பொருட்டு எஸ்சி மற்றும் எஸ்டி பட்டியலில் அருந்ததியருக்கென மூன்று சதவீதம் உள் ஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கின் தீர்ப்பின் படி கலைஞர் ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட மூன்று சதவீத அருந்தியருக்கான இட ஒதுக்கீடு செல்லும் என்று மாபெரும் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.

இந்த தீர்ப்பை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக எழுச்சியோடு வரவேற்று வாழ்த்து தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் 17வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு பள்ளி மாணவ, மாணவிகள், ஆசிரிய பெருமக்கள், கழக நிர்வாகிகள் என பலர் மலர் தூவி அஞ்சலி செலுத்தி தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும் பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவ - மாணவிகளுக்கும் நோட்டு புத்தகங்கள், ஜாமென்ட்ரி பாக்ஸ், பென்சில், பேனா ஆகியவற்றை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் சி. பாலாஜி, சி.மூர்த்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கே. சண்முகபிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவகுமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் டி. வினோத், எம். ஜான்சன், இ. சுதர்சன், பூபாலன், ஜி .முனிவேல், ஜி. செல்வம், கமலநாதன், டாக்டர் எம்.மைக்கேல், பி. செந்தில், எம். கோவிந்தன், இ. கார்த்திக் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், அரியலூர் நாகராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை! நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 07.08.2024 அன்று புதன்கிழமை காலை கடலூர் கிழக்கு மாவட்டத்திலுள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி, வார்டு, வட்டம், மற்றும் கிளைகள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், நினைவு அஞ்சலி செலுத்தியும், அமைதி ஊர்வலம் நடத்தியும் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும்.

இந்நிகழ்ச்சிகளை அந்தந்தப் பகுதிகளிலுள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.





மாதவரத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த அருந்ததியருக்கான மூன்று சதவீத இட ஒதுக்கீட்டிற்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் வழங்கியதை கொண்டாடும் விதமாக 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்பு வழங்கினார். வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் சி. பாலாஜி, சி. மூர்த்தி, எஸ் . சிவகுமார், கே. சண்முகப்ரியன், எம். ஜான்சன், இ.சுதர்சன், பூபாலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ‘நீட்’ தேர்வு தகிடு தத்தங்கள்!

**நா**டு முழுக்க இப்போது மருத்துவக் கல்விக்கான இடங்கள் நுழைவுத் தேர்வின் மூலமாகவே நிரப்பப்பட்டு வருகின்றன.

ஆனால், இந்தாண்டு நீட் வினாத்தாள் முன்கூட்டியே கசிந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்தச் சூழலில் நீட் தேர்வில் 705 மதிப்பெண்கள் பெற்ற குஜராத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர், +2 தேர்வில் தோல்வி அடைந்துள்ளார்.

இது நாடு முழுக்க பெரும் அதிர்வலைகளையும், விவாதத்தையும் கிளப்பியுள்ளது.

மேலும், குஜராத்தைச் சேர்ந்த அந்த மாணவி மருத்துவப் படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வில் 720க்கு 705 மதிப்பெண்கள் பெற்று இருக்கிறார்.

அதே நேரம் அங்கு நடந்த பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் அவர் அறிவியல் பாடத்தில் தோல்வி அடைந்து இருந்தார்.

இதையடுத்து அவர் மறுதேர்வு எழுதினார்.

இருப்பினும், அவர் மறு தேர்விலும் தோல்வியடைந்துள்ளார் என்பதுதான் உச்சக்கட்டம்.

+2 தேர்வில் தேர்ச்சி பெறத் தவறியதால் அவரால் நீட் தேர்வில் தேர்ச்சி அடைந்தும் கூட கல்லூரிக்குச் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

நீட் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவி, +2 தேர்வில் தேர்ச்சி கூடப் பெற முடியாமல் போனது பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

அந்த மாணவி, கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட +2 தேர்வுகளை எழுதி இருக்கிறார்.

இதில் அவர் இயற்பியல் மற்றும் வேதியியல் என இரு பாடங்களில் தோல்வி அடைந்துள்ளார்.

இதையடுத்து அவர் ஜூன் மாதம் நடைபெற்ற துணைத் தேர்வுகளை எழுதியிருக்கிறார்.

ஆனால், அதிலும் கூட அவரால் இயற்பியல் பாடத்தில் தேர்ச்சி பெற முடியவில்லை.

கடந்த மார்ச் மாதம் நடந்த பொதுத் தேர்வில் அவர் இயற்பியல் பாடத்தில் 21 மதிப்பெண்கள் மட்டுமே பெற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல ஜூன் மாதம் நடைபெற்ற மறு தேர்விலும் அவரால் வெறும் 22 மதிப்பெண்கள் மட்டுமே பெற முடிந்துள்ளது.

வேதியியல் பாடத்தில் மெயின் தேர்வில் அவர் வெறும் 31மதிப்பெண்கள் மட்டுமே பெற்றுள்ளார்.

இதையடுத்து நடந்த துணைத் தேர்வில் சரியாக தேர்வு ஆகத் தேவையான 33 மதிப்பெண்களை மட்டுமே அவர் பெற்றுள்ளார்.

துணைத் தேர்வு முடிவுகளில் அவர் பெற்ற மதிப்பெண்களால் நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்தது குறித்தும் பலரும் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக அங்குள்ள கல்வியாளர் ஒருவர் கூறுகையில், ‘நீட் தேர்வில் முறைகேடுகள் நடந்துள்ளதாக உச்ச நீதிமன்றத்தால் வழக்கு நடக்கும் இந்த சூழலில் இந்த வழக்கைப் புறக்கணிக்க முடியாது. +2 தேர்வில் கூட தேர்ச்சி பெற முடியாத மாணவி நுழைவுத் தேர்வில் இவ்வளவு அதிக மதிப்பெண்கள் பெறுவது சாத்தியமற்றது. இந்த விவகாரம் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்’ என்றார்.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து சமீபத்தில் தான் தேர்வு மையம் வாரியாக நீட் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதையடுத்து, மாணவர்கள் நீட் தேர்வில் எவ்வளவு மதிப்பெண்கள் பெற்றனர். +2 தேர்வில் எத்தனை மதிப்பெண்கள் பெற்றனர் என்பதை ஒப்பிட்டு மதிப்பெண் குறியீடு பட்டியல் இணையத்தில் பரவியது.

அதில் பல மாணவர்கள் நீட் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றாலும், +2 தேர்வில் பெரியளவில் மதிப்பெண்கள் பெறவில்லை.

இந்த குறிப்பிட்ட மாணவி நீட் தேர்வில் 705 மதிப்பெண்கள் பெற்று, மாநில அளவில் முதலிடம் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் இயற்பியலில் 99.89 %, வேதியியலில் 99.14 %, உயிரியலில் 99.14 % மதிப்பெண்கள் பெற்றிருந்தார். ஒட்டுமொத்தமாக 99.94% மதிப்பெண்கள் பெற்றிருந்தார்.

இதன் மூலம் அவரால் அங்குள்ள அரசு மருத்துவக் கல்லூரியிலேயே இடம் கிடைக்கும் சூழல் இருந்தது. ஆனால், இரண்டு முறை முயன்றும் அவரால் +2 தேர்வில் தேர்ச்சி பெற முடியாததால் அவரால் கல்லூரியில் சேர முடியாத சூழல் உருவாகியுள்ளது.

நீட்டா நீட் என்ற பெயரில் நடத்தப்படும் மருத்துவக் கல்விக்கான தேர்வில் என்னென்ன வகையில் திருகு தத்தங்கள் அரங்கேற்ற முடியுமோ அவற்றை நடத்திக் கொண்டு இருக்கும் தேசிய நுழைவுத் தேர்வு முகமை.

நீட் தேர்வு முறைகேடுகள் தொடர்பாக இதுவரை பதின்மூன்று நபர்கள் சி.பி.ஐ யால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு தனியார் தொலைக்காட்சி நடத்தும் வாராந்திர நகைச்சுவை நிகழ்ச்சியில், ‘டூப்புல டாப்பு யார்?’ என்ற ஒரு பகுதி வரும். அதுபோன்று நுழைவுத் தேர்வு முடிவுகளில் ‘டூப்புல டாப்பு’ ஆட்களை காண முடிகிறது.

இது போன்ற செய்திகள் வெளியாகும் சூழலிலும், நீதி மன்றங்கள் வேடிக்கை பார்ப்பது, ‘மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்; கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது?’ என்று தி.மு.கவின் தலைவரும், முதல்வருமான கலைஞர் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது.

நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை எழுப்பினால், இது காங்கிரஸ் கட்சி ஆட்சியில் கொண்டு வந்தது என்று வியாக்கியானம் பேசும் மைனாரிட்டி பா.ஜ.க புள்ளிகள், காங்கிரஸ் கொண்டு வந்த எத்தனையோ நல்ல திட்டங்களை நிலச்சரிவில் மூழ்கிய உயிர்களைப் போன்று, குழித் தோண்டி புதைத்தது போலவே, நீட் தேர்வு முறையையும் குழி தோண்டிப் புதைக்கலாமே!

ஆனால், உடன்பட மாட்டார்கள். ஏனென்றால், பி.எம்.கேர் ஃபண்ட் போன்று மர்மங்கள் நிறைந்த விடயமாச்சே!

**- நன்றி**
**புதிய வணக்கம் தமிழ்நாடு**
02.08.2024





பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை முகாம் அலுவலகத்தில் நேற்று (02.8.2024) ஆஸ்திரேலிய துணைத் தூதரக அதகாரி திருமதி.சிலாய் ஜக்கி அவர்கள் மற்றும் துணை அதிகாரி Samuel Myers ஆகியோர் சந்தித்து கல்வித்துறையில் தமிழ்நாடு அரசும் ஆஸ்திரேலிய அரசும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய முன்னெடுப்புகள் குறித்து கலந்துரையாடினர்.